National Institute of Labour Studies
02nd Floor, Labour Secretariat,
Narahenpita, Colombo 05.

லங்கிகா வீரசிங்க
கணக்காளர்

கே. மாரிமுத்து
ஆளுநர் குழு உறுப்பினர்

CEYLON WORKERS CONGRESS
72,
Ananda
Coomaraswamy
Mawatha,
P. O. Box 1294
COLOMBO 07

W.M.D. Suranga Gunarathne
Director General
National Institute of Labour Studies
2nd Floor, Labour Secretariat
Narahenpita, Colombo 05

டப்ளியூ. ஏ. எம். சுரங்க குணரத்ன
பணிப்பாளர் நாயகம்

R P A Wimalaweera
Secretary
Ministry of Labour and Foreign Employment
7th Floor, "Mehewara Piyesa"
Narahenpita, Colombo 05.

ஆர். பி. ஏ. விமலவீர
தலைவர்

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2023 ஷரூபா.	2022 ஷரூபா.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருத்தான காசுப் பாய்ச்சல்கள்			
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை / (பற்றாக் குறை)		11,095,652.81	18,874,140.02
சீராக்கம்			
தேய்மானம்	11	4,153,176.82	3,263,669.50
நிலையான வைப்புகளிலிருந்து முதலீட்டு வருமானம்	22	(17,833,167.86)	(8,225,306.97)
IRD வட்டி மீதான வரியை நிறுத்திவைத்தல்	10.1	876,697.53	
அகற்றுவதில் இழப்பு	12.1	34,478.26	536,848.70
ஓய்வூதிய நன்மைகள்	23	161,515.00	228,675.00
பணமல்லாத சீராக்கல் நிலையான வைப்பிற்கான வட்டி	20		8,934.33
செயற்பாட்டு மூலதன கட்டணங்களுக்கு முன் செயல்பாட்டு லாபம்		**(1,511,647.44)**	**14,686,960.58**
Increase/Decrease in Working Capital			
இருப்பு (அதிகரிப்பு) / குறைப்பு	15	60,848.94	145,813.95
கிடைக்க வேண்டியவை (அதிகரிப்பு) / குறைப்பு	21	(1,368,060.88)	(149,212.46)
முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் (அதிகரிப்பு) / குறைப்பு	18	2,048,512.00	748,000.00
செலுத்த வேண்டியவை (அதிகரிப்பு) / குறைப்பு	19	3,093,506.92	(973,877.16)
முந்தைய ஆண்டுகளில் சீரமைப்புகள்	20	(78,648.24)	56,038.10
முந்தைய ஆண்டிற்கான சீரமைப்புகள்		**2,244,511.30**	**14,513,723.01**
(அகற்றல் / சொத்து / நிலையான சொத்துக்கள்)			
இறுதி செலவு		**-**	**-**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்		**2,244,511.30**	**14,513,723.01**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்			
நிலையான வைப்பு முதலீடு			
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	14.1	(278,449.76)	(3,595,449.68)
சொத்து, இயந்திரங்கள் மற்றும் பொருட்களை அகற்றுவதில் இழப்பு	22	(3,000,000.00)	(14,750,000.00)
நிலையான வைப்பு முதலீடு		(3,278,449.76)	(18,345,449.68)
நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான தேறிய நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்			
திறைசேரி மானியம் மூலதனம்		-	2,936,334.69
நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு பாய்ச்சல்		-	2,936,334.69
காசு மற்றும் காசுக்கு சமமானவை நிகர (அதிகரிப்பு) / குறைப்பு		(1,033,938.46)	(895,391.98)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	17	2,032,746.98	2,928,138.96
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	17	**998,808.52**	**2,032,746.98**

3.4 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

3.4.1 நிறுவன தகவல்

3.4.1.1 அடிப்படை அறிமுகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற ஒரு நியதிச்சட்ட அமைப்பாக்கும். தொழில் திணைக்களத்தின் ஊழியர் கல்வி துறையை மீள்கட்டமைக்கும்போது, தொழில் விடயபொறுப்பு அமைச்சின் கீழ் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட்டதன் ஊடாக பாராளுமன்றத்தால் சட்டரீதியாக தாபிக்கப்பட்டது. இந்த சட்டத்தின்படி தொழில் தருநர்கள், தொழில்சார் சங்கங்கள், அரச அலுவலர்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சேவை பெறுநர்கள் அடங்கலாக தொழில் துறையில் முத்தரப்பு பங்குதாரர்களின் பிரதிநிதியாளர்களைக் கொண்டமைந்த ஆளுகைச் சபையால் நிறுவனம் நிருவகிக்கப்படுகிறது. தற்போது, இந்த நிறுவனம் இரண்டாவது மாடி, தொழில் பொதுச் செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

3.4.1.2 அடிப்படை செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் இயல்பு

தொழில் துறை சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகளின் விடய துறை தொடர்பாக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடாத்துதல், பணியிட உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன தொடர்பாக தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் அடிப்படை செயற்பாடுகள் என்று குறிப்பிடலாம்.

3.4.1.3 நிறுவனத்தின் பதவியணி

2007 செப்தெம்பர் மாதம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தால் அதன் தொழில்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படினும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் பதவியணி அங்கீகரித்தல் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தால் நிறுவனத்திடம் தொழில்பாட்டு பதவியணி இணைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த அலுவலர்களின் சம்பளம் உரிய நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் இந்த நிதிக் கூற்றில் ஊழியர்களுக்கான வேதனம் மற்றும் சம்பளம், கொடுப்பனவுகள் தேசிய தொழில் கற்கை நிறுவனத்தில் மூலம் பணம் செலுத்தப்பட்டது. எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் பணியாளர்களுக்கு ஊதியங்கள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தால் செலுத்தப்படும்.

3.4.1.4. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி முகாமைத்துவம்

நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து 2011 செப்டம்பர் 30 வரை நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பதவியணி மற்றும் ஏனைய தடைகள் காரணமாக)

3.4.2. தயாரிக்கும் அடிப்படை

3.4.2.1 இணக்கப்பாட்டு பிரகடனம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள், நிதி நிலை அறிக்கை தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்களின் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கைக்கான குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது. இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவகத்தால் விதிக்கப்பட்ட இலங்கையின் பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க இந்தக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

3.4.2.2 அளவீட்டு அடிப்படை

நிதி அறிக்கைகள் திரட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிதி அறிக்கைகளின் பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணங்கள் பொருட்டு எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை.

3.4.2.3 தற்போதுள்ள வியாபாரங்கள்

தற்போது காணப்படும் வியாபாரமாக பராமரிப்பதற்குள்ள ஆற்றல், தாபிக்கும் மதிப்பீடு பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களால் வியாபரத்தை கலைக்கவோ அல்லது நிறுத்தவோ கருதவில்லை.

3.4.2.4 ஒப்பீட்டு தகவல்

நிறுவனத்தால் கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ந்து இற்றைப்படுத்தி பயன்படுத்தியதுடன், அவை கடந்த ஆண்டில் பயன்படுத்தியவற்றுடன் பொருந்தவில்லை. நடப்பு (தற்போதைய) ஆண்டில் சமர்ப்பிப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் போது மட்டும் முந்தைய ஆண்டு தரவு தகவல் மற்றும் வெளியீடுகள் மீண்டும் தயாரிக்கப்பட்டு பயன்கடுத்தப்படுகிறது.

3.4.2.5 செயல்பாட்டு மற்றும் நாணயம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயம் ஆகிய இலங்கை ஷரூபாயில் இந்த நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

3.4.2.6 கருத்தில் கொள்ள வேண்டிய கணக்கியல் கொள்கைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிநிலை கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கமைவாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.4.3.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளுக்காக அவற்றை உபயோகப்படுத்தும் நிலைக்கு கொண்டு வரும்போது சில செலவுகளுடன் கையகப்படுத்தல் அல்லது கட்டுமான செலவு, ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் செலவுகள் ஆகும். செலவுகளின்போது, சொத்தாக அடிப்படையில் அடையாளம் காணப்பட்டதன் பின்னர், மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளில் ஏதேனும் தேய்மானத்தைக் கழித்த பிறகு, மறுமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியைகொண்டுச் செல்லப்படும். ஏனைய அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் திரட்டிய தேய்மானம் கழிக்கப்பட்டு செலவினம் குறிப்பிடப்படும். வித்தியாசமாகப் பயன்படுத்தக்கூடிய சில காலம் நீடிக்கும் முக்கியமான சாதனங்களிலிருந்து உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் ஒரு தனி உருப்படியாக கொண்டுள்ளவிடத்து, குறித்த சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் பிரிதான உருப்படியாக கணக்கிடப்படும். ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் தேவைக்கேற்ப சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு, பயனுள்ள காலத்துக்கும் அதிகமாக செலவுகளை பதிவழிப்பதற்காக சொந்த காணிகளைப் பார்க்க அனைத்து ஆதனம், பொறித்தெகுதி மற்றும் உபகரணங்கள் மீது தேய்மானம் அறவிடப்படும். அகற்றப்பட்ட தேதி வரை சொத்து பயன்படுத்தப்படும் தேதிகளில் தேய்மானம் வழங்கப்படுகிறது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் 7 SLPSAS 7 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் விபரங்கள் படி சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் செலவின முறைக்கு கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் பின்வருமாறு எளிய நேரியல் முறையில் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

பயன்படுத்தப்படும் அடிப்படை வருடாந்திர விகிதங்கள் பின்வருமாறு.

3.5 வருடாந்திர விகிதங்கள்

	2023
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	10 ஆண்டுகள்
மர பொருட்கள் மற்றும் உபகரணங்கள்	13 ஆண்டுகள் (7.5%)
கணினிகள்	10 ஆண்டுகள்
பெயர்ப்பலகைகள் மற்றும் பலர்	03 ஆண்டுகள்
புத்தகங்கள்	05 ஆண்டுகள்

02.10.2013 ஆம் திகதியில் மதிப்பீட்டு திணைக்களத்தால் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான அறிக்கை 07.01.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

3.5.1 பொருட் பதிவேடு (Inventory)

நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட பொருட் பதிவேடுகளின் செலவில் வருமானம் மற்றும் செலவின வெளியீடுகளுக்காக அறவிடப்பட்டது.

3.5.2 பணம் மற்றும் சம மதிப்பு

பணம் மற்றும் சம மதிப்புகள், கையிருப்புகள் மற்றும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட தொகைகளை கொண்டமைந்திருக்கும்.

3.5.3 பொறுப்பு மற்றும் விதிகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடமைகள் உள்ளவிடத்து ஐந்தொகையில் பொறுப்புகள் அடையாளம் காணப்படும். பொருளாதார நன்மைகளை உள்ளடக்கி வளங்களின் வெளியேற்றத்தை அதன்போது தீர்க்கப்படுவதனை எதிர்பார்க்கப்படுகிறது. கடனாளியின் வேண்டுகோளின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியில் ஆண்டுக்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்பாக கவனத்தில் கொள்ளப்படுவது, தற்கால பொறுப்புகளாக ஆகும். கடந்தகால நிகழ்வின் விளைவாக, நம்பத்தகுந்த வகையில் மதிப்பிடக்கூடிய தற்கால சட்டப்பூர்வ அல்லது அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பாக தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்திற்கு இருந்தால், ஒதுக்கீடுகள் அடையாளம் காணப்படுவதுடன் கடமைகளை தீர்ப்பதற்காக பொருளாதாரப் பலன்கள் வெளியேறுவது அவசியம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

3.5.4 வருமானம் அடையாளம் காணுதல்

பொருட்கள் வழங்கப்பட்டு ஒப்படைத்துள்ள சந்தர்ப்பத்தில் பொருட்கள் /சேவைகளின் விற்பனை மூலம் வருமானம் அடையாளம் காணப்படும். கவனத்தில் கொள்ளப்படும் கிடைக்கப்பெறுவனவைகள் மற்றும் கிடைப்பதற்கு முடியுமான நியாயமான பெறுமதிகள், இலங்கை அரசின் சார்பில் சேகரிக்கப்பட்ட வரி தொடர்பான கழிப்புகள் மற்றும் விற்பனையின்மொத்த வருமானமாக குறிக்கப்படுகிறது.

வருமான அடிப்படைகள்

கற்கைநெறிகளில் பங்கேற்பாளர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, திரட்டிய அடிப்படையின் மீது வருமானம் கணக்கிடப்படுகிறது. தவிர்க்க முடியாத காரணங்களால் சில பங்கேற்பாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவதற்கு முன் கற்கை பாடநெறியை கைவிடப்படுவதுடன், பல்வேறு காரணங்களால் சில கற்கைநெறி கட்டணங்களை அறவிட இயலாது. இந்த கிடைக்கப்பெறுவனவைகள் வருமானமாக கருதப்படுவதில்லை. இருப்பினும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் முடிந்தால் நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கற்கைநெறியின் மொத்த வருமானம் கற்கைநெறியின் ஆண்டிற்காக தீர்மானிக்கப்படுகிறது.

3.5.5 கிடைக்கப்பெறுவனவைகள்

எதிர்மறை மற்றும் சந்தேகத்திற்குரிய கிடைக்கப்பெறுவனவைகளுக்காக மொத்த கொடுப்பனவுகளைப் புரிந்துக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டுள்ளதாக வியாபார கிடைக்கப்பெறுவனவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வேறு கிடைக்கப்பெறுவனவைகள் மற்றும் அறவிடுகள் மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கிடைக்கப்பெறுவனவைகளுக்கான கொடுப்னவுகள் செலவிலிருந்து கழிக்கப்படுகின்றன.

3.5.6 வரையறுக்கப்பட்ட உதவுதொகை திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது, ஒரு தனி பிரிவுக்கு நிலையான உதவுதொகை செலுத்தும் பிரிவின் கீழ் ஒரு பிந்தைய வேலைவாய்ப்பு நன்மை திட்டமாகும். அதிக கட்டணம் செலுத்துவதற்காக சட்டப்பூர்வ அல்லது மறைமுகமான பொறுப்பு எதுவும் இல்லை. ஒவ்வொரு பணியாளர்களையும் உள்ளடக்கும் சேமலாப நிதிக்கு உதவுதொகை செலுத்துவதில் ஏற்படும், இழப்புகள் அல்லது ஆதாயங்கள் செலவுகளாக அடையாளம் காணப்படும். சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியமாக ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் முறையே 12மூ மற்றும் 3மூ வீதங்களை நிறுவனம் செலுத்துகிறது.

3.5.7 காசுப் பாய்ச்சல் அறிக்கை

இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி, SLPSAS காசுப் பாயச்சல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



நான்காம் அத்தியாயம்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. LSW/B/NILS/SR/01/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2024 மே 31 ஆம் திகதி

தலைவர்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டப்ளியூ பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

பிரதி:- செயலாளர் - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
செயலாளர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

தலைவர்,

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய தொழில் கற்கை நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, போதியளவிலான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகளைக் கொண்டமைந்துள்ள 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வுத் தராதரங்களுக்கிணங்க (இ.க.த) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வுத் தராதரங்களுக்கிணங்க எனது பொறுப்புக்கள் இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின்பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள

இக்கணக்காய்வு அறிக்கைத் தேதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களெனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களில், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் அது தொடர்பாக எந்தவிதமான உறுதிப்படுத்தலையோ கருத்தினையே வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாவது மேற்படி அடையாளங் காணப்பட்ட தகவல்களை வாசிப்பதுடன் அவ்வாறு செய்யும் போது, ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் அல்லது கணக்காய்வு மூலமாக அல்லது வேறு விதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின்படி போதியளவு பொருத்தவில்லையா என்பதைக் கவனத்திற்கொள்வதாகும்.

நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் போதுமான அளவிலான தவறுகள் உள்ளதாக நான் தீர்மானித்தால் செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கப்படும் தரப்புகளிடம் குறித்த விடயங்களை நான் அறிக்கையிடுதல் வேண்டும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது

உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமொரு உறுப்பினர் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு தொடர்புள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத வகையில் நிறுவனம் செயற்பட்டுள்ளது என்பது தொடர்பாக

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயலாற்றப்பட்டுள்ளது என்பது தொடர்பாக

விதிமுறைகள், பிரமாணங்களுக்கான மேற்கோள்	அவதானிப்பு
(அ) 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் 5(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள்	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின நடவடிக்கைகள் நிர்வாகம், முகாமைத்துவம் என்பன ஆளுகைச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிறுவன நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு சட்டத்தினால் ஆளுகைச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள, விதிக்கப்பட்டுள்ள அல்லது கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை செயற்பாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிறுவனத்தின் ஆளுகைச் சபையானது, இரண்டு கூட்டங்களை மட்டும் நடாத்தியிருந்தது.
(ஆ) 16 (1) ஆம் பிரிவு	சட்டத்தின்கீழ் பணிகளை நிறைவேற்றும் பணிகளுக்கமைவாக, தேவையான தொழில்நுட்பக் குழுவில் குறிப்பிட்டதொரு எண்ணிக்கையினை சபையால் நியமிக்க முடியுமாயிருப்பினும், அத்தகைய குழுவொன்று நியமிக்கப்படவில்லை.

2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகளும் பொறுப்புக்களுடனும் இணங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள்	அவதானிப்பு
(அ) 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டம்	
(i) 3(இ) உப பிரிவு	நூலகம் மற்றும் தகவல்களை வழங்கும் சேவைகளை தாபித்தல் மற்றும் அவற்றை பராமரித்தல் நிறுவனத்தின ஒரு பிரதான நோக்கமாக இருந்த போதிலும், 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை அத்தகைய தகவல் வழங்குதல் சேவைகளை நடைமுறைப்படுத்தப்படவில்லை.
(ii) 3(உ) வாசகம்	ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள், சங்கங்களுடன் கிட்டிய ஒத்துழைப்புடன் செயற்படவேண்டியுள்ள போதிலும், அத்தகைய நிறுவனங்கள், அமைப்புகள் என்பவற்றுடன் கிட்டிய ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, நிறுவன வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை - 2006 இன் பிரகாரம் முறையான மதிப்பீடொன்றைத் தயாரித்து, பரிசோதனை செய்யாது பழுதுபார்க்கப்பட்ட குளிரூட்டல் இயந்திரங்களுக்கமைவான விபரங்களை பராமரிக்காது மற்றும் பழுதுபார்த்தல் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்படாது 2023 ஆம் ஆண்டு 07 சந்தர்ப்பங்களில் குளிரூட்டல் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா. 1,096, 250 செலவளிக்கப்பட்டுள்ளது.

புதிய குளிரூட்டல் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களை தவிர்ந்த எஞ்சியவர்களின் விலை கணக்குகளை பொய்யாக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அறிய வந்ததுடன், அனைத்து துணைக் கருவிகளையும் பொருத்தி ரூபா.481,825 ஐ செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்ட இரண்டு இயந்திரங்களை, மீண்டும் ரூபா.91,075 ஐ செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்படினும் உரிய இயந்திரங்கள் செயற்பாடுகளின்றி காணப்பட்டன.

(ஆ) தேசிய தொழிற் கற்கை நிறுவனத்தின் 2021/2022 ஆண்டுகளில் வருடாந்த அறிக்கைகள் 25 ஐ அச்சிடுவதற்கும் 06 மென் பிரதிகளுக்கும் ரூபா. 522,930 செலவிடப்பட்டுள்ளதுடன், அச்சிடுகையில் Offset முறைக்கு மேற்கொள்ளும் இணக்கத்துடன் கட்டளைகளை ஒப்படைக்கப்படினும், குறித்த முறைக்கு அப்பாற்பட்டு Digital முறையில் அச்சிடப்பட்ட பிரதிகள் பொருட்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையின் முகப்பு அட்டை உரிய தரத்துடன் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகுதியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி காணப்பட்ட போதிலும், உரிய நிரல் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உரிய பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், உள்ளக கணக்காய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) நிறுவனம் தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக 2020 யூலை மாதம் ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் செயற்றிட்டப் பிரிவு தாபிக்கப்பட்டதுடன், கணக்காய்வு திகதி வரை பிரிவினால் முறையாக அலுவலரொருவரை இணைக்காமையால் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கு அது பாதகமாக அமைந்திருந்தது.

(இ) 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய 04/2023 ஆம் இலக்க பொது முயற்சியாண்மைகள் சுற்றறிக்கை பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் பதவியணி பொருட்டு போனஸ், ஊக்குவிப்பு படி செலுத்துவதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டின் இலாபத்தில் 30 தொகை திறைசேரியிடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

ஒப்பம்:

டப்ளியூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
National Institute of Labour Studies

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය කම්කරු අමාත්‍යාංශය යටතේ ක්‍රියාත්මක වන ව්‍යවස්ථාපිත ආයතනයකි. මෙම ආයතනය 2007 සැප්තැම්බර් 11 වන දින ස්ථාපිත කරන ලද අතර 2010 අංක 12 දරන ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතන පනත මගින් බලාත්මක කරන ලදී. කම්කරු ක්ෂේත්‍රයේ ත්‍රෙපාර්ශව හවුල්කරුවන් වන සේවය, සේවක හා රජයේ සේවකයින්ගෙන් සැදුම්ලත් පාලක මණ්ඩලයක් මගින් මෙම ආයතනය පාලනය වේ. කම්කරු අණපනත්, නීති රීති රෙගුලාසි පිළිබඳව දැනුවත්, ඵලදායි ශ්‍රම බලකායක් නිර්මාණය කිරීම සඳහා අවශ්‍ය පුහුණු හා පර්යේෂණ කටයුතු සැලසුම් කිරීම සහ ක්‍රියාත්මක කිරීම මෙම ආයතනයේ මූලික කාර්යභාරයයි.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இந்த நிறுவகம், 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் சட்டத்தினால் வலுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிறுவகம், முத்தரப்பு அக்கறைதாரர்களான தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரச அலுவலர்களைக் கொண்ட ஆளுநர் சபையினால் நிருவகிக்கப்படுகின்றது. இந்நிறுவகத்தின் பிரதான பணி, தொழில் சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி அறிந்துள்ள பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுள்ள தொழில் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை வடிவமைப்பதும், நடைமுறைப்படுத்துவதுமாகும்,

The National Institute of Labour Studies is a statutory body functioning under the Ministry of Labor. This Institute was established on 11 September 2007 and was empowered by the National Institute of Labour Studies Act No. 12 of 2010. This Institute is governed by a governing body consisting of the tripartite partners, the employers, the employees and the public servants. The primary role of this Institute is to design and implement the training and research activities required to create an effective and productive workforce that is aware of labour Acts, Ordinance, laws, rules and regulations.

2 වන මහල, කම්කරු මහලේකම් කාර්යාලය, කොළඹ 05.
2 ஆவது தளம் தொழில் செயலகம், கொழும்பு 05.
2nd Floor, Labour Secretariat, Colombo 5.

Tel : 0112 786541/ 0112 786548 | Email : admin@nils.gov.lk | Web : www.nils.gov.lk